**நவம்பர் – 23**

# TNPSC துளிகள்

- விப்ரோ ஒரு ஐரோப்பியப் பணிக் குழுவை (EWC) அமைப்பது தொடர்பாக தொழிலாளர் பிரதிநிதிகளுடன் ஒரு உடன்பாட்டை எட்டியுள்ளது.
    - விப்ரோவின் EWC என்ற குழுவின் உருவாக்கம் இந்தியாவில் தலைமையகத்தை கொண்ட ஒரு நிறுவனத்தால் நிறுவப்படும் முதல் அமைப்பாகும்.
- சர்வதேச மேசைப்பந்தாட்ட சம்மேளனத்தின் (ITTF) தடகள ஆணையத்திற்கு இந்தியாவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் வீரர் என்ற பெருமையை நட்சத்திர இந்திய வீரர் அச்சந்தா ஷரத் கமல் பெற்றுள்ளார்.
    - இவர் இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் (IOA) தடகள ஆணையத்தின் துணைத் தலைவராகவும் உள்ளார்.
- லான்ஸ் நாயக் மஞ்சு, 10,000 அடி உயரத்தில் மேம்படுத்தப் பட்ட ஹெலிகாப்டர் (ALH) துருவ் என்பதில் இருந்து குதித்த இந்திய ராணுவத்தின் முதல் பெண் ஸ்கை டைவர் ஆனார்.
- இந்திய ராணுவம் 242வது ராணுவப் பொறியாளர்கள் தினத்தை நவம்பர் 18ஆம் தேதி கொண்டாடுகிறது.
    - ராணுவப் பொறியாளர்கள் அமைப்பில் மதராஸ், வங்காளம் மற்றும் பாம்பே என்ற மூன்று குழுக்கள் 1932 ஆம் ஆண்டு 18 நவம்பர் அன்று ராணுவத்தில் இணைக்கப் பட்டன.
- தென் கொரியாவின் டேகு நகரில் நடைபெற்ற ஆசிய ஏர் கன் சாம்பியன்ஷிப் 10 மீட்டர் ஏர் பிஸ்டல் போட்டியில் ஹரியானாவைச் சேர்ந்த ஷிவா நர்வால் தங்கப் பதக்கம் வென்றார்.
- முக நூலின் தாய் நிறுவனமான மெட்டா, சந்தியா தேவநாதனை நாட்டின் புதிய உயர் செயல் அதிகாரியாக நியமித்துள்ளது.
    - முன்னதாக, நாட்டின் முன்னாள் தலைவர் அஜித் மோகனை உடனடியாக பணியில் இருந்து விலக்குவதாக மெட்டா அறிவித்தது.
- உத்தரகாண்ட் உயர்நீதிமன்றம் நைனிடாலில் இருந்து ஹல்த்வானிக்கு மாற்றப் பட உள்ளது.
    - 2000 ஆம் ஆண்டு உத்தரகாண்ட் மாநிலம் உருவாக்கப்பட்டு ஒரு நாள் கழித்து நைனிடாலில் உயர் நீதிமன்றம் அமைக்கப்பட்டது.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாடு யானை இறப்புத் தணிக்கைக் கட்டமைப்பு

- நாட்டிலேயே இது முன்னெப்போதும் இல்லாத இதே வகையிலான முதல் முயற்சி ஆகும்.
- மாநிலத்தில் யானை இறப்புகளை பதிவு செய்வதற்கும் கண்காணிப்பதற்கும் மிகவும் விரிவான மற்றும் வெளிப்படையான செயல்முறையை அமைக்கிற வகையில் தமிழ்நாடு வனத்துறை யானை இறப்புத் தணிக்கைக் கட்டமைப்பை அறிமுகப் படுத்தியுள்ளது.
- யானையின் இறப்புக்கான காரணங்களைத் தீர்மானிக்க, பிரேதப் பரிசோதனையை

நடத்துவதற்கான ஒரு முறையான நிலையான நெறிமுறையை இது பரிந்துரைக்கிறது.

- தடுக்கக் கூடிய மற்றும் இயற்கைக்கு மாறான மரணங்களின் சூழ்நிலைகளை ஆய்வு செய்யவும், அவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை உருவாக்கவும் இது உதவும்.
- தமிழகம் முழுவதும் உள்ள காட்டு யானைகள் இறப்பிற்கு இது பொருந்தும்.
- இது அனைத்து வனவிலங்குப் பகுதிகளிலும், பிராந்தியப் பிரிவுகளிலும் ஒரே மாதிரியாகப் பின்பற்றப்பட வேண்டும்.
- உலகில் உள்ள ஆசிய யானைகளின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கு இந்தியாவைக் கொண்டுள்ளது.
- நம்ப முடியாத அளவிற்கு, இவை இந்தியாவின் பெரும்பகுதி முழுவதும் மக்களுடன் வாழ்கின்ற நிலையில், அவற்றின் வாழிடப் பகுதி சுமார் 20 சதவிகிதம் மட்டுமே பாதுகாக்கப் பட்ட பகுதிகளுக்குள் உள்ளது.
- ஆயினும் கூட, அவற்றின் எண்ணிக்கையானது நிலையாக அல்லது சில பிராந்தியங்களில் அதிகரித்து வருகிறது.
- நீண்ட காலம் வாழும் பாலூட்டிகளில் ஒன்றான யானைகள், காடுகளில் ஆயுட்காலம் சுமார் 50 ஆண்டுகள் மற்றும் ஒரு தலைமுறையின் நீளம் 22 ஆண்டுகள் என்ற அளவில் வாழ்கின்றன.


**THE PROTOCOL**

*There are 5 stages to be followed immediately after death of an elephant*



1. **FIR has to be filed**
2. Site information report needs to be prepared, **including perambulation and external examination**
3. Interim postmortem report, **including the procedure and carcass disposal, has to be there**
4. Management intervention report, **including formulation of preventive measures based on outcome, has to be prepared**
5. **Preparation of periodical death audit reports** for follow-up action must

## தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்




- தமிழக அரசானது இந்த ஆணையத்தினை மீண்டும் அமைத்துள்ளது.
- முன்னதாக இந்த ஆணையத்திற்குத் தலைமை வகித்த உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி M. தணிகாச்சலம் அவர்கள் தனது ராஜினாமா கடிதத்தை அரசிடம் சமர்ப்பித்துள்ளார்.

- எனவே, அதன் தலைவராக சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி V. பாரதிதாசன் என்பவரை அரசு நியமித்துள்ளது.

## சைபீரிய செந்தொண்டை குருவி

- ஒரு அரிய வகை குளிர்கால புலம்பெயர்வு பறவை இனமான சைபீரிய செந்தொண்டை குருவியானது நீலகிரிப் பகுதியில் காணப்பட்டது.
- இது தரைப் பகுதியில் அதிகம் வாழும் ஒரு பாடும் பறவையாகும்.
- தென்கிழக்கு ஆசியாவில் (தாய்லாந்து, இந்தியா, இந்தோனேசியா மற்றும் வங்காள தேசம்) குளிர்காலத்தின் பொது இடம்பெயரும் பறவை இனங்களாகும்.




# தேசியச் செய்திகள்

## டிஜிட்டல் சக்திப் பிரச்சாரத்தின் 4வது கட்டம்




- தேசிய மகளிர் ஆணையம் ஆனது சைபர்பீஸ் அறக்கட்டளை மற்றும் மெட்டா ஆகியவற்றுடன் இணைந்து இந்தப் பிரச்சாரத்தினைத் தொடங்கியுள்ளது.
- இது பெண்களை எண்ணிம முறையில் திறமையானவர்களாக மாற்றுவதில் கவனம் செலுத்துவதோடு இணையத்தில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு சட்டவிரோத அல்லது தேவையற்ற நடவடிக்கைகளுக்கும் எதிராக எதிர்த்துப் போராடுவதற்கான

ஒரு விழிப்புணர்வினை வழங்குகிறது.

- இது இணைய வெளியில், பெண்கள் மற்றும் சிறுமிகளின் எண்ணிமத் திறனை மேம்படுத்துதல் மற்றும் அதற்கான அதிகாரமளித்தல் தொடர்பான ஒரு இந்திய அளவிலான திட்டமாகும்.

# சர்வதேசச் செய்திகள்

## ஆசியா-பசிபிக் பகுதியில் உள்ள மிகப்பெரிய தரவு மையச் சந்தைகள்

- ஹைதராபாத், சென்னை மற்றும் புது தில்லி ஆகியவை ஆசிய-பசிபிக் (APAC) பிராந்தியத்தில் உள்ள மூன்று சிறந்த தரவு மையச் சந்தைகளாக உருவாகியுள்ளன.
- இது நைட் ஃபிராங்கின் அறிக்கையின்படி பெறப்பட்ட ஒரு தகவலாகும்.
- தரவு மையம் என்பது பெரிய அளவிலான தரவைச் சேகரிக்க, செயலாக்க, சேமிக்க மற்றும் அதைப் பரப்புவதற்கு நிறுவனங்கள் அவற்றைப் பயன்படுத்துகின்ற வகையில் நெட்வொர்க் செய்யப்பட்ட கணினிகள், சேமிப்பக அமைப்புகள் மற்றும் கம்ப்யூட்டிங் உள்கட்டமைப்பு ஆகியவற்றைக் கொண்ட ஒரு வசதி ஆகும்.

## ஆப்கானிஸ்தான் தொடர்பான மாஸ்கோ பாணியிலான ஆலோசனை கூட்டம்

- ஆப்கானிஸ்தான் தொடர்பான மாஸ்கோ பாணியிலான நான்காவது ஆலோசனை கூட்டத்தில் இந்தியா பங்கேற்றது.
- ரஷ்யா, ஆப்கானிஸ்தான், சீனா, பாகிஸ்தான், ஈரான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் சிறப்புப் பிரதிநிதிகளின் ஆலோசனைக்கான ஆறு-தரப்பு நெறி முறையின் அடிப்படையில் இது 2017 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- 2021 ஆம் ஆண்டில் ரஷ்யாவில் நடைபெற்ற மாஸ்கோ பாணியிலான கூட்டத்தில் இந்தியப் பிரதிநிதிகளும் தலிபான் அதிகாரிகளும் முதன்முறையாக நேருக்கு நேர் சந்தித்தனர்.




# பொருளாதாரச் செய்திகள்

## செயலில் உள்ள நிறுவனங்கள் தரவரிசை

- கோவிட்-19 தொற்று வெடிப்பு காலத்தில் இருந்து மகாராஷ்டிரா மற்றும் டெல்லிக்கு

அடுத்தபடியாக அதிக எண்ணிக்கையிலான புதிய நிறுவனங்களை உத்தரப் பிரதேசம் சேர்த்துள்ளது.

- தொற்றுநோய்க்குப் பிந்தைய கட்டத்தில் கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்களை உத்தரப் பிரதேசம் முந்தியுள்ளது.
- இந்தத் தரவு பெருநிறுவன விவகார அமைச்சகத்தால் ஒருங்கிணைக்கப்பட்டது.
- மகாராஷ்டிரா மற்றும் டெல்லிக்கு அடுத்தபடியாக செயல்படும் நிறுவனங்களின் எண்ணிக்கையில் உத்தரப் பிரதேசம் மூன்றாவது இடத்தில் உள்ளது.
- இந்தப் பிரிவில் கர்நாடகாவும், தமிழ்நாடும் நான்காவது மற்றும் ஐந்தாம் இடங்களில் உள்ளன.
- உத்தரப் பிரதேசம் 30,000 நிறுவனங்களைச் சேர்த்த நிலையில், மகாராஷ்டிரா கடந்த மூன்று ஆண்டுகளில் 60,000 புதிய நிறுவனங்களைச் சேர்த்துள்ளது.


Business Sense

TOP 5 STATES WITH MOST COS

| State | No of active cos* |
| --- | --- |
| Maharashtra | 300,000 |
| Delhi | 220,000 |
| UP | 108,000 |
| Karnataka | 104,000 |
| Tamil Nadu | 99,038 |
| India | 1,500,000 |

Source: MCA
*as of Sept 30, 2022

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## விக்ரம்-எஸ்




- ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள விண்வெளித் தளத்தில் இருந்து வெற்றிகரமாக ஏவப்பட்ட இந்தியாவின் முதல் தனியாரால் உருவாக்கப்பட்ட ராக்கெட் இதுவாகும்.

- பல தசாப்தங்களாக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தால் (ISRO) ஆதிக்கம் செலுத்தப்படும் இந்தியாவின் விண்வெளித் துறையில் தனியார் துறையின் நுழைவை இது குறிக்கிறது.
- 'பிரரம்ப்' (ஆரம்பம்) என்று பெயரிடப்பட்ட ஸ்கைரூட் ஏரோஸ்பேஸின் நிறுவனத்தின் முதல் பயணத்தில் மூன்று வாடிக்கையாளர்களின் செயற்கைக் கோள்களை ஏற்றிச் சென்றது.
- இந்தப் புதியப் பயணத்தின் மூலம், ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ், விண்வெளியில் ராக்கெட்டைச் செலுத்திய நாட்டின் முதல் தனியார் துறை நிறுவனமாக மாறியது.
- இந்திய விண்வெளித் திட்டத்தின் நிறுவனர் மற்றும் புகழ்பெற்ற விஞ்ஞானி விக்ரம் சாராபாய்க்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இவற்றுக்கு 'விக்ரம்' என்று பெயரிடப் பட்டுள்ளது.

## ஆய்வகத்தில் வளர்த்த இறைச்சி – அமெரிக்கா





- அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் (எஃப்.டி.ஏ) முதன்முறையாக விலங்குகளின் உயிரணுக்களிலிருந்து மனித நுகர்வுக்காக வளர்க்கப்பட்ட இறைச்சிப் பொருளை அழித்தது.
- அவை சுத்தமான இறைச்சி அல்லது வளர்ப்பு இறைச்சி என்றும் அழைக்கப் படுகின்றன.
- விலங்கு உயிரணு வளர்ப்புத் தொழில்நுட்பம் வளர்ப்பு விலங்கு இறைச்சியை உருவாக்க பயன்படுத்தப் படுகிறது.
- வளர்க்கப்பட்ட இறைச்சி பெரும்பாலும் ஸ்டெம் செல்கள் நகலெடுக்கப்படும் ஒரு தொட்டியில் வளர்க்கப்படுகிறது.
- இந்தத் தொட்டி அமினோ அமிலங்கள், சர்க்கரைகள் மற்றும் செல்கள் வளர தேவையான பிற ஊட்டச் சத்துக்கள் கொண்ட சீரம் ஆகியவற்றால் நிரப்பப் பட்டு இருக்கும்.

- பின்னர் இது வளரும் உயிரினங்களுக்கான ஆய்வகச் சாதனமான உயிரி உலையில் வைக்கப்படுகிறது.
- வளர்ப்பு இறைச்சி விற்பனைக்கு அனுமதி வழங்கிய முதல் நாடு சிங்கப்பூர் ஆகும்.
- இது விலங்குகள் கொல்லப் படுவதிலிருந்து காப்பாற்ற உதவுகிறது.

## ஹைட்ரஜன் பள்ளத்தாக்குகள்

- "புத்தாக்கத் திட்டம்" என்ற தூய ஹைட்ரஜன் திட்டத்தின் கீழ் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையானது, 2030 ஆம் ஆண்டிற்குள் குறைந்தது 3 ஹைட்ரஜன் பள்ளத்தாக்குகளைக் கண்டறிந்து நிறுவும் செயல்முறையை அமைத்துள்ளது.
- "ஹைட்ரஜன் பள்ளத்தாக்கு" என்பது ஒரு புவியியல் பகுதியாக - ஒரு நகரம், ஒரு பகுதி, ஒரு தீவு அல்லது ஒரு தொழில்துறை தொகுதி - அதில் கணிசமான அளவு ஹைட்ரஜனைப் பயன்படுத்துகின்ற பல ஹைட்ரஜன் பயன்பாடுகள் ஒரு ஒருங்கிணைந்த ஹைட்ரஜன் சுற்றுச்சூழல் அமைப்பாக, பொருளாதாரத்தை மேம்படுத்துகிற வகையில் இந்தத் திட்டமானது ஒன்றிணைக்கப் படுகின்றது..
- புத்தாக்கத் திட்டம் (MI) என்பது 23 நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஆணையம் (ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பாக) ஆகியவை இணைந்து, தூய எரிசக்தியை மலிவு விலையில், ஈர்ப்பு மிக்க மற்றும் அணுகக் கூடியதாக மாற்றுவதற்கான ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் செயல் விளக்க முறைகள் ஆகியவற்றின் மீதான முதலீட்டை ஊக்குவிக்கச் செய்வதற்கான பணியில் ஈடுபட்டுள்ள ஒரு பத்தாண்டு கால நடவடிக்கையாகும்.
- இது பாரீஸ் ஒப்பந்த இலக்குகள் மற்றும் நிகர சுழிய உமிழ்வு நிலை ஆகியவற்றிற்கான பாதைகளை நோக்கிய முன்னேற்றத்தை துரிதப்படுத்தும்.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## கார்பன் வரம்பு வரி

- ஐரோப்பிய ஒன்றியமானது, BASIC அமைப்பின் உறுப்பினர் நாடுகள் எதிர்த்து வரும் கார்பன் வரம்பு சீரமைவு செயல்முறை என்ற கொள்கையை முன்மொழிந்துள்ளது.
- கார்பன் வரம்பு சீரமைவு செயல்முறை (CBAM) என்பது அதிக கார்பன் கொண்ட பொருட்களின் இறக்குமதிகளால் வெளியாகும் கார்பன் கசிவினைத் தடுப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு முன்னெடுப்பாகும்.

- இதன் கீழ், இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீது, அவற்றை உற்பத்தி செய்ய செலவிடப்படும் கார்பன் அளவின் அடிப்படையில் வரி விதிக்கப்படும்.
- வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு இடையே நிலவும் சந்தை களத்தினைச் சமன் செய்வதற்காக இறக்குமதிகளுக்கு சமமானச் செலவினமானது வரியாக விதிக்கப்படுகிறது.
- BASIC என்பது பிரேசில், தென்னாப்பிரிக்கா, இந்தியா மற்றும் சீனா ஆகிய நான்கு புதிதாக தொழில்மயமாக்கப் பட்ட நாடுகளின் குழுவாகும்.




## CITES அமைப்பின் 19வது பங்குதாரர்கள் மாநாடு - செந்தலை கொண்ட செந்நிற ஓடு உடைய ஆமை





- பனாமாவில் CITES அமைப்பின் 19வது பங்குதாரர்கள் மாநாடானது (COP19) நடைபெற்றது.
- அழிந்து வரும் வன விலங்குகள் மற்றும் தாவர உயிரினங்களில் மேற்கொள்ளப்படும் சர்வதேச வர்த்தகம் தொடர்பான உடன்படிக்கையானது வாஷிங்டன் மாநாடு என்றும் அழைக்கப் படுகிறது.
- இது உலக வனவிலங்கு மாநாடு என்றும் அழைக்கப்படுகிறது.
- அரசாங்கங்களுக்கிடையேயான ஒரு சர்வதேச ஒப்பந்தமான இதனை நடைமுறைப் படுத்துவதற்கான கடமையானது அதன் ஒப்பந்ததார நாடுகளின் மீது சட்டப் பூர்வமாக பிணைக்கப் பட்டுள்ளது.

- வன விலங்குகள் மற்றும் தாவர இனங்களில் மேற்கொள்ளப்படும் சர்வதேச வர்த்தகம் ஆனது அந்த உயிரினங்களின் வாழ்வை அச்சுறுத்துவதில்லை என்பதை உறுதி செய்வதே இதன் நோக்கமாகும்.
- இந்த CITES உடன்படிக்கையின் கீழ் செந்தலை கொண்ட செந்நிற ஓடு உடைய ஆமையின் (படகுர் கச்சுகா) பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக இந்தியா ஒரு முன் மொழிதலை முன்வைத்துள்ளது.
- இது இந்தியா மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகளைப் பூர்வீகமாகக் கொண்ட ஒரு நன்னீர் வாழ் ஊர்வன இனமாகும்.

### வனம் மற்றும் பருவநிலை சார்ந்த நாடுகளின் கூட்டாண்மை (FCLP)

- 26 நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து வனம் மற்றும் பருவநிலை சார்ந்த நாடுகளின் கூட்டாண்மையினை 27வது பங்குதார மாநாட்டில் அறிமுகப்படுத்தின.
- 2030 ஆம் ஆண்டிற்குள் வன இழப்பு மற்றும் நிலச் சீரழிவைத் தடுப்பதற்காக அரசாங்கம், வணிகம் மற்றும் சமூகத் தலைவர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை ஒன்றிணைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஆனால் இந்தியா இந்தக் கூட்டாண்மையில் உறுப்பினராக அங்கம் வகிக்கவில்லை.




### பசுமை கடல்சார் துறை

- பசுமை கடல்சார் துறைக்காக இந்தியா- நார்வே ஆகிய நாடுகள் கைகோர்க்கின்றன.
- துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிகள் அமைச்சகம் ஆனது, பல்வேறு கடல்சார் துறைகளில் மேற்கொள்ளப்பட்ட 150 க்கும் மேற்பட்ட முயற்சிகளை அடையாளம் கண்டு கடல்சார் இந்தியா கொள்கை 2030 என்ற கொள்கையினைத் தயாரித்துள்ளது.
- இந்திய அரசானது நார்வே பசுமைப் பயணம் 2050 என்ற திட்டத்தின் ஒரு உறுப்பினர் ஆகும்.
- கப்பல்களை மறுசுழற்சி செய்வதற்கான ஹாங்காங் ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது.

## அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### இந்தியாவின் உள்கட்டமைப்புத் தேவைகளுக்கான நிதியுதவி குறித்த அறிக்கை

- உலக வங்கியானது "இந்தியாவின் உள்கட்டமைப்புத் தேவைகளுக்கு நிதியளித்தல்: வணிக ரீதியான நிதியளிப்புக்கான கட்டுப்பாடுகள் மற்றும் கொள்கை

நடவடிக்கைக்கான வாய்ப்புகள்" என்ற அறிக்கையினைச் சமீபத்தில் வெளியிட்டது.

- அடுத்த 15 ஆண்டுகளில் இந்தியாவிற்கு சுமார் 840 பில்லியன் அமெரிக்க டாலர்கள் தேவைப்படும் என்று எதிர்பார்க்கப் படுவதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- 2036 ஆம் ஆண்டிற்குள் 600 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இந்தியாவின் நகரப் பகுதிகளில் வசிப்பார்கள் என்று இந்த அறிக்கை கணித்துள்ளது.
- இது மொத்த மக்கள் தொகையில் 40 சதவீதமாகும்.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## யுனெஸ்கோ அமைப்பின் மதன்ஜீத் சிங் பரிசு 2022




- இது சகிப்புத் தன்மை மற்றும் அகிம்சையை மேம்படுத்துவதற்காக வழங்கப்படுகிறது.
- 2022 ஆம் ஆண்டில், கேமரூனைச் சேர்ந்த பிரான்கா மா-இஹ் சுலேம் யோங் என்பவருக்கு இந்த விருதானது வழங்கப்பட்டது.
- இந்தப் பரிசு ஆனது 1995 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் சகிப்புத் தன்மை ஆண்டு விழா மற்றும் மகாத்மா காந்தி அவர்களின் 125வது பிறந்தநாள் விழாவின்

போது நிறுவப்பட்டது.

- அதே ஆண்டில் யுனெஸ்கோ அமைப்பின் உறுப்பினர் நாடுகள் சகிப்புத் தன்மை குறித்த கொள்கைகளின் பிரகடனத்தை ஏற்றுக் கொண்டன.
- யுனெஸ்கோ அமைப்பின் நல்லெண்ணத் தூதராக பணியாற்றிய முன்னாள் இந்திய கலைஞர், எழுத்தாளர் மற்றும் தூதர் மதன்ஜீத் சிங்கின் நன்கொடை மூலம் இந்த விருதிற்கான நிதி வழங்கப் படுகிறது.

# விளையாட்டுச் செய்திகள்

## அடுத்து நடைபெற உள்ள உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள்




- சர்வதேச கிரிக்கெட் சபையானது, 19 வயதிற்குட்பட்ட ஆடவர் மற்றும் மகளிருக்கான டி-20 உலகக் கோப்பைப் போட்டிகள் நடைபெற உள்ள இடத்தை அறிவித்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டு 19 வயதிற்குட்பட்ட ஆடவர்களுக்கான டி-20 உலகக் கோப்பைப் போட்டியானது இலங்கையில் நடைபெறவுள்ளது.
- 2026 ஆம் ஆண்டு 19 வயதிற்குட்பட்ட ஆடவர்களுக்கான டி-20 உலகக் கோப்பைப்

போட்டியானது ஜிம்பாப்வே மற்றும் நமீபியா ஆகிய இடங்களில் நடைபெற உள்ளது.

- 2025 ஆம் ஆண்டு 19 வயதிற்குட்பட்ட மகளிருக்கான டி-20 உலகக் கோப்பைப் போட்டியினை மலேசியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகள் இணைந்து நடத்த உள்ளன.
- மேலும் 2027 ஆம் ஆண்டு 19 வயதிற்குட்பட்ட மகளிருக்கான டி-20 உலகக் கோப்பைப் போட்டியினை வங்காளதேசம் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகள் இணைந்து நடத்த உள்ளன.

## 2வது வடகிழக்கு ஒலிம்பிக் போட்டிகள்

- இது மேகாலயாவின் ஷில்லாங் நகரில் நடைபெற்றது.
- இதில் மணிப்பூர் அணி ஒட்டு மொத்த சாம்பியன் பட்டத்தினை வென்றது.
- அசாம் அணி இரண்டாவது இடத்தையும், அருணாச்சலப் பிரதேச அணி மூன்றாவது இடத்தையும் பிடித்தன.
- அடுத்த ஆண்டின் வடகிழக்கு ஒலிம்பிக் போட்டிகளை நாகாலாந்து மாநிலம் நடத்த உள்ளது.




## பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகள் 2024

- 2024 ஆம் ஆண்டிற்கான பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளுக்கான சின்னமாக ஃபிரிஜியன் தொப்பி அறிவிக்கப்பட்டது.
- பிரஞ்சுக் குடியரசின் சின்னமாக விளங்கிய இது நிகழ்காலத்திற்கு ஏற்ப காலணிகளை அணிந்துள்ளவாறு சித்தரிக்கப்பட்டுள்ளது.
- ஒலிம்பிக் ஃபிரிஜியன் அளவில் சற்று சிறியது.
- மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டியின் ஃபிரிஜியன் சற்று மெலிதானது ஆகும்.
- இது ஒரு மாற்றுத் திறனாளிகளுக்கான ஃபிரிஜியன் என்பதைக் குறிக்கும் வகையில் அதன் வலது காலில் ஒரு தட்டு போன்ற அமைப்பு பொறுத்தப்பட்டுள்ளது போல் உள்ளது.
- மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டியின் சின்னம் எவ்வாறு வேறுபட்டது என்றால் அதன் கால்களில் ஒன்று மாற்றுத் திறனாளி தடகள வீரரின் காலினை ஒத்தது ஆகும்.

- ஃபிரிஜியன் ஒரு பெரிய குழுவின் ஒரு பகுதியாக இருந்தாலும், 2024 ஆம் ஆண்டு பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளின் முக்கிய நாயகர்கள் ஒலிம்பிக் ஃபிரிஜியன் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டியின் ஃபிரிஜியன் ஆகும்.




## முக்கிய தினங்கள்

### தேசிய இயற்கை மருத்துவ தினம் - நவம்பர் 18




- இது நவம்பர் 18, 2018 அன்று ஆயுஷ் அமைச்சகத்தால் (ஆயுர்வேதம், யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி) நிறுவப்பட்டது.
- 1945 ஆம் ஆண்டு நவம்பர் 18 ஆம் தேதியில், மகாத்மா காந்தி அகில இந்திய நேச்சர் க்யூர் அறக்கட்டளையின் தலைவராக ஆனார்.
- எனவே, இந்த நாள் தேசிய இயற்கை மருத்துவத் தினமாக கடைபிடிக்க தேர்வு செய்யப் பட்டது.
- இயற்கை சிகிச்சையின் பலன்களை அனைத்துத் தரப்பு மக்களுக்கும் கிடைக்கச் செய்யும் நோக்கில் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- இந்த ஆண்டு நிகழ்வின் கருத்துரு: "இயற்கை மருத்துவம்: ஒரு ஒருங்கிணைந்த மருத்துவம்" ஆகும்.
- இயற்கை மருத்துவம் என்ற சொல் ஜெர்மனியின் ஜான் ஷெல் என்பவரால் 1895 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டு, பெனடிக்ட் லஸ்ட்டால் பிரபலப் படுத்தப்பட்டது.

- ❖ லஸ்ட் 'நவீன இயற்கை மருத்துவத்தின் தந்தை' என்றும் குறிப்பிடப்படுகிறார்.

## குழந்தைகள் பாலியல் வன்கொடுமை தடுப்புக்கான உலக தினம் - நவம்பர் 18

- ❖ ஐ.நா பொதுச் சபை நவம்பர் 18 ஆம் தேதியை குழந்தை பாலியல், வன்கொடுமை மற்றும் வன்முறையைத் தடுப்பதற்கும் குணப்படுத்துவதற்குமான உலக தினமாக அறிவித்துள்ளது.
- ❖ குழந்தை பாலியல் வன்கொடுமையின் பாதிப்புகளை உலகளாவியப் பார்வையைக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்ட புதிய உலக தினம் இதுவாகும்.
- ❖ இதற்கான தீர்மானம் சியரா லியோன் மற்றும் நைஜீரியாவால் கொண்டு வரப்பட்டு 120க்கும் மேற்பட்ட நாடுகளால் ஆதரவு வழங்கப்பட்டது.




## உலக நுண்ணுயிர் எதிர்ப்பு விழிப்புணர்வு வாரம் - நவம்பர் 18 முதல் 24 வரை




- ❖ இந்த ஆண்டு இந்த அனுசரிப்பின் கருத்துரு "ஒன்றாக நுண்ணுயிர் எதிர்ப்பைத் தடுப்பது" என்பதாகும்.
- ❖ மருந்துகளின் பயன்பாட்டிற்கு எதிராக பாக்டீரியா மாறும் போது நுண்ணுயிர் எதிர்ப்பு ஏற்படுகிறது.
- ❖ மனிதர்களோ விலங்குகளோ அல்லாமல் பாக்டீரியாக்களே நுண்ணுயிர்

எதிர்ப்பிகளை எதிர்க்கும்.

❖ உலக சுகாதார அமைப்பு 2015 ஆம் ஆண்டில் "உலக நுண்ணுயிர் எதிர்ப்பு விழிப்புணர்வு வாரத்தை" தொடங்கியது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★